12TH STD

**முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 2**

**வணிகவியல்**

CHAPTER 16 - 23

நேரம் : 1.15 மணி

மதிப்பெண் : 45

## பகுதி --- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. உரிய மறுபயன் அளித்து தனது சொந்த உபயோகத்திற்காகப் பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுக் கொள்ளும் நபர் ----------------
   அ) வாடிக்கையாளர் ஆ) நுகர்வோர் இ) வாங்குபவர் ஈ) உபயோகிப்பவர்

2. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் -------------------
   அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்
   இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை

3. சரியான கூற்று எது?
   அ) முத்திரை தாளில் புகார் மனு அளிக்க வேண்டும்
   ஆ) புகார் அளிக்க விரும்பும் நபர், அஞ்சல் வழியாக குறைதீர்ப்பு அமைப்புக்கு புகாரை அளிக்க முடியாது
   இ) புகார் அளிக்க வழக்கறிஞர்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியமில்லை.
   ஈ) புகார் அளிக்கும் எதிர்தரப்பினரின் பெயர் முகவரி தரப்பட வேண்டிய அவசியமில்லை.

4. ஜி.எஸ்.டி. என்பது --------, ---------, -----------
   அ) சரக்கு மற்றும் வெற்றி வரி
   ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
   இ) சரக்கு மற்றும் விற்பனை வரி
   ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

5. கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் எது வணிகப் பணியை சார்ந்து இருக்காது?
   அ) கணக்கியல் பணி ஆ) ஒருங்கிணைப்பு இ) வாய்ப்பை கண்டறிதல் ஈ) திட்டமிடல்

6. -------------- என்பது தனியார் துறைக்கு முன்னர் பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும்.
   அ) தாராளமயமாக்கல் ஆ) தனியார் மயமாக்கல்
   இ) உலகமயமாக்கல் ஈ) பொது நிறுவனம்

7. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு -------------
   அ) 1940 ஆ) 1997 இ) 1930 ஈ) 1960

8. பொருளின் மீதான உரிமை என்பது -----------------
   அ) பொருளின் உடைமை ஆ) பொருளைப் பாதுகாத்தல்
   இ) பொருளின் மீதான அனுபவ பாத்தியம் வைத்திருப்பவர் ஈ) இவற்றில் ஏதுமில்லை

9. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவாதியாகிறது?
   அ) 3 மாதங்கள் ஆ) 4 மாதங்கள் இ) 5 மாதங்கள் ஈ) 1 மாதம்

10. எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பணம் செலுத்துமாறு வரையப்படும் ஆவணம் -----------
    அ) ஆணை ஆவணம் ஆ) கொணர்பவர் ஆவணம்
    இ) தெளிவில்லா ஆவணம் ஈ) நேர ஆவணம்

## பகுதி - II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 2 = 8$

11. உட்புறச் சூழல் என்றால் என்ன?
12. மேலெழுதுதல் - வரையறு
13. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் இரண்டினை குறிப்பிடுக.
14. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்றால் என்ன?
15. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
16. திரு. குமார் என்பவர் திரு. விக்னேஷ் என்பவரிடம் 500 மூட்டை சிமெண்ட்டை வீடு கட்டுவதற்காக அடுத்தவாரம் தருவதாக உறுதியளிக்கிறார். இந்நிலையில் சிமெண்ட் என்ற பொருள் எத்தகைய சரக்கு வகையினைச் சார்ந்தது? அது பற்றி விளக்கம் தருக.

## பகுதி - III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 3 = 12$

17. நுகர்வோர் உரிமைகள் - வரையறு
18. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
19. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?
20. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. ( ஏதேனும் மூன்று )
21. வியாபாரத்தின் மூன்று சுற்றுச் சூழல் காரணிகளை குறிப்பிடுக.
22. மூன்றடுக்கு நீதிமன்றங்கள் யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $3 \times 5 = 15$

23. விற்பனை மற்றும் விற்பனை ஒப்பந்தத்தை வேறுபடுத்துக.

    ( அல்லது )

    வியாபாரத்தின் பரந்தச் சூழலின் பங்கு பற்றி விவாதிக்கவும்.

24. காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக.

    ( அல்லது )

    மேலெழுத்தின் வகைகளை விவரிக்க.

25. நுகர்வோரின் உரிமைகள் யாவை?

    ( அல்லது )

    நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?